# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-8/2021

Prosecution witness – PW 2

| | | |
|---|---|---|
| Name | : திரு.ரவி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused absent. Petiton filed U/s.317 Cr.P.C and allowed.)

08.05.2025– 01.30 PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் ஓரிவயல் கிராமத்தில் குடியிருந்து ஆடுகள் வளர்த்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. வழக்கு சம்பவத்தில் இறந்து போன சந்தானம் எனது மாமனார். எனது மாமனார் கருங்குளம் கிராமத்தில் குடியிருந்து அவருக்கு சொந்தமான ஆடுகளை வளர்த்து வாழ்க்கை நடத்தி வந்தார்.

2. சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் நான் ஊரிலிருந்த போது மாலை சுமார் 05.00 மணியளவில் கடலாடி காவல் நிலையத்திலிருந்து போலீசார் எனது மாமனார் கடலாடி போஸ் ஆபிஸ் அருகில் விபத்து நடந்ததாக சொல்லி வரச்சொன்னார்கள். நான்கடலாடி அரசு மருத்துவமனை சென்று எனது மாமனாரை பார்த்தேன். எனது மாமனார் பின் தலையில் காயம்பட்டு பேச முடியாத நிலையில் இருந்தார்.

3. நான் விசாரித்தபோது எனது மாமனார் கடலாடி தாலுகா அலுவலகம் முன்பு ஆடுகளை மேய்த்து விட்டு வரும் போது வாகனம் மோதி விட்டதாகவும் காயம்பட்ட எனது மாமனாரை ஆட்டோவில் ஏற்றி கடலாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாக சொன்னார்கள். பின்னர் மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு

மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு சொன்னார்கள். எனது மாமனாரின் நிலைமை மோசமாக இருந்ததால் காயம்பட்ட எனது மாமனாரை எங்கள் வீட்டிற்கு கொண்டு சென்றோம்.

4. பின்னர் மறுநாள் இரவு 10.00 மணியளவில் எனது மாமனார் இறந்து விட்டார். எனது மாமனார் இறந்தது மறுநாள் காலையில் தான் தெரியவந்தது. பின்னர் எனது மாமனார் இறந்தது குறித்து கடலாடி காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னதன் பேரில் போலீசார் வந்தார்கள். நான் விசாரித்தபோது எனது மாமனார் ஆடுமேய்த்துக்கொண்டு வந்த போது ஏனாதி கிராமத்தை சேர்ந்த மலைச்சாமி என்பவர் ஆட்டோ ஓட்டி வந்து மோதிவிட்டதாக சொன்னார்கள்.

5. நானும் எனது மனைவியும் காவல் நிலையம் சென்று எதிரி மீது புகார் அளித்தோம். புகார் மனுவிலுள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னை போலீசார் விசாரித்தார்கள் .

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. அ.சா.1 எனது மனைவி. கருப்பசாமி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் எனது உறவினர். சாட்சிப்பட்டியலில் உள்ள மலைச்சாமி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் எனது உறவினர். எனது மாமனார் இறக்கும் போது எத்தனை வயது இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. எனது மாமனார் இறந்தது சம்மந்தமாக நான் மட்டும் தான் புகார் அளித்தேன். நான் புகார் மனுவாக தான் கொடுத்தேன் போலீசார் தான் எழுதினார்கள்.

ஏனாதி கிராமத்தை சேர்ந்த மலைச்சாமி தான் விபத்தை ஏற்படுத்தினார் என்று போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும். அந்த மலைச்சாமியை நான் இது வரை பார்த்ததில்லை. எந்த வாகனம் விபத்தை ஏற்படுத்தியது என்று எனக்கு தெரியாது. எனது மாமனார் இறந்தது கூறி

இழப்பீடு கோரி நீதிமன்றத்தில் மனு செய்துள்ளோமா என்றால் இல்லை. நான் புகார் மனுவில் எனது மாமனார் இரவு 11.00 மணிக்கு இறந்ததாக குறிப்பிட்டுள்ளேன்.

சந்தேகத்தின் பேரில் கடலாடி சார்பு ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கைக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி